# ஆதி மார்க்க னீதி மொழி

**October 2025**

***இதழ் 51 – அக்டோபர் மாதம் 2025 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai October 2025

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன், அருமையான இந்த புரட்டாசி மாத மின்னணு சஞ்சிகையானது பதினொரு அவை மற்றும் மூன்று இசை வகுப்பு நிகழ்வுடன் 51ஆவது இதழாக மலர்ந்து உங்கள் கைகளில் தவழ்கிறது.

மெய்மணம் எனும் அழியாப் பொருளின் ரகசியத்தைப் பேசும் மாறா மணம் கமழும் வாடா மல்லியாக மலர்ந்துள்ள இதில் எல்லா காலங்களிலும் வந்த ஞானிகள் அருளிய ரகசியங்களே பொதிந்துள்ளன.

னன்மையெ னுந்நிரு மூலம ணிப்பதி
னந்நியெ னும்தீயில்

என சாலை ஆண்டவர்கள், பிள்ளைத் தமிழில் அருளிய மேலான நன்மை எனும் உண்மையை ஆதி மார்க்க னீதி அவையை நம்பி வந்து ஆகிக் கொண்ட மக்களே அறிவர். அவர்களே நந்தியின் ரகசியமும் அதன் மந்திரமும் அறிந்து செயலாக ஆக்கிக் கொண்ட என் அவையின் அங்கமாகத் திகழ்கின்றனர் என்பது சத்தியம்.

தான் பெற்ற இன் பொருள் இன்னது என உணர்ந்த மக்கள் வெளியாக்கிய தெய்வீக வியாக்கியானமே, இன்று உங்கள் கைகளில் மலர்ந்து மணக்கும் இச்சஞ்சிகை. அறிவுள்ளோர் மாத்திரமே அறிகின்ற மனதின் மணமே இங்கு அறிவுக்கான செயலுள்ள மின்னணு இதழாக பிரதி மாதமும் மலர்ந்து மணம் கமழ்கிறது. வேதம் கூறும்

ஏணிப்ப டியது ஐம்பத்தொன் றாகுமே
எட்டெழுத் துவீட்டில் தோணுதந்நா

எனும் பஞ்சாட்சர ரகசியத்தின் பிரதியாக மலர்ந்துள்ளதே இந்த 51ஆவது இதழ். இதைப் பார்த்து தொடர்கின்ற என் நன்மக்கள் யாவரும் பயனும் பலனும் பெற வேண்டும் என்பது ஒன்றே எம் நோக்கம்.

அ முதல் ஃ வரையிலும் உள்ள உயிர் எழுத்தில் உயிர் எப்பொழுது மெய்யாக மாறுகிறது? உயிர்மெய்யாக மாறும் பொழுது அது மெய்யாக இருக்கிறதா? உயிர்மெய்யாக இருக்கிறதா? எனும் ரகசியத்தை நிஜ செயலாக்க வந்ததுவே ஆதி மார்க்க னீதி அவை. பெருமாளின் சிறப்பும் பெருமாள்தலின் சிறப்பும் நேர் முகத்தில் போதித்து, நம் அழி ஆசையைப் புரட்டி ஆசியாக மாற்றும் மெய்வழியின் சிறப்பை உணர்த்துவதே புரட்டாசி மாதம்.



Copyright © AMNA Trust, Chennai

இன்று எம் ஆதி மார்க்க னீதி அவையின் மெய்யறிந்த மக்கள் தீர்க்கமாக முழங்கிக் கொண்டிருக்கும் நிகழ்வு யாவற்றையும் பெரும் முயற்சியுடன் தொகுத்து திரட்டி உலக மக்கள் யாவரும் பலனும் பயனும் பெற வேண்டி வழங்கியதே கண்ணேர் சாட்சியாக விளங்கும் இம் மின்னணு சஞ்சிகை. நன்மக்கள் யாவரும் இதைப் படிப்பது மட்டுமின்றி தேடவும், தேடும் பொருளை அடைகின்ற மக்களாகவும் இருக்க வேண்டி எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*உனது தேகாதியந்நமாகிய உடல், உனது பொருளாகிய வாக்கு, உனது ஆவியாகிய பிரணவம், னினைவாகிய பிரம்மம் யாவும் எமது எண்ணத்துக்கு லயப்பட்டுத் துள்ளிக்குதித்து னின்றால் மீட்பு னிச்சயம். இந்த மெய்யினிடத்தில் இருக்கிற உனது ஆத்திரத்தின் ஏற்றத்தாழ்விற்குத் தக்கபடியே உனது மீட்பும் தண்டனையும் படிப்படியாக இருக்கிறது. னீ, கோர தண்டனை அடைவதைக் கண்டு எம்மால் சகிக்க முடியாதாகையால், அதைத் தடுக்கவே னாம் இப்போ இவ்வளவு ஆத்திரப்படுகிறோம்.*

*ஒரு சீடன் தன் ஆசானுக்குச் செய்யும் உபகாரம், ஒரு யானைக்கு அல்லது ஒரு புலிக்கு ஒரு எலி உபகாரம் செய்வதுபோல் இருக்கிறது. இன்னும் எலிபோய், யானை அம்மணமாயிருக்கிறது என்று கோவணம் கட்ட முயற்சிப்பது போலிருக்கிறது.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 செப்டம்பர் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 அக்டோபர் மாதம் வெளியீடு

## 05-09-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **னேருரைதம் பிஸ்மில்லா ஹிர் ரஹூமானோடும்...** எனும் பூரணப் புதையல் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
இறை திருவடியை தன் தலையில் பதியச் செய்த மகாபலி சக்ரவர்த்தியை வரவேற்கும் திருவிழாவே கேரளத்தின் ஓணம் பண்டிகையும், அத்தப் பூக்கோலமும் ஆகும். வண்ண மலரால் வாசல் அலங்கரிக்கும் அக்கோலம் ஆசானின் ஓரிதழ் மலர் மணம் கொண்டு ஜீவ கோலத்தின் இரகசியம் அறியும் அகமிய மெய்ச் செயலாகும். விஷுகனி எனும் திருவிழா மூலம் கால தேச வர்த்தமானம் கடந்தும் மெய்ஞ்ஞான நிலைகள் நிலைத்து நிற்கிறது. வள்ளல் பெருமான் ஆறாம் திருமுறையில் அருளிய நான்கு புருஷார்த்தங்களும் பெறுவதற்கு ஒழுக்கமே மூலதனமாகும். ஏழ் நிலை கடந்து எட்டாம் நிலையில் உள்ள ஜோதி பிரகாசத்தை தரிசிக்க வைப்பவரே குருபெருமான். அவர்கள்பால் அத் திருச்செயலை பெற்று கொள்ளும் சீடர்களே உண்மை நெறியில் நின்று சாதித்து ஜீவன் கண்ட ஜென்ம சாபல்யம் பெறுகிறார்கள்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் - 7** உயிரினும் மேலான ஒழுக்கத்தின் மேன்மையை உணர்ந்த உத்தமர்களே ஜீவ ரஸ்துவின் ரகசியம் அறிவர். தேவத் திருவிளையாடல் புரியும் பெரியோர்களின் மனோ நோக்கிற்கு ஒத்திருந்து அவர்களின் பரிசுத்த நினைவில் ஒட்டி வாழும் ஒழுக்க சீலர்களுக்கே பத்தியத்தின் பெரும் பலன் கிட்டுகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* பூரணக் கடலாக வரும் குருபிரானின் நாதத் தொனி ஓசை நம் செவியுள் நுழைந்து நான்கு தேக ரகசியம் விளங்கச் செய்து பரிபூரண இறை பொருளுடன் இரண்டற கலக்கச் செய்கிறது. இப்பெருநிலை வைப்பானது வால குருவின் மலர்ப் பாதம் பணிந்த புண்ணியர் யாவர்க்கும் நித்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 06-09-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **வாழ்வு முதல் சம்பத்தை மதித்திடாமல்...** என்ற சிவானந்த போதம் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* குருவருளால் மனம் தெளிந்து, வாழும் காலத்தில் சிவலோகம் சென்று வரும் செயலே ஜீவப்பிரயாணம். நம்மை பிறவிச் சுழலில் சிக்க வைக்கும் மனதில் இருக்கும் துருவான மாயை நீங்கி பிறவாமை பெற மாயோனாம் குருவின் அருள் வேண்டும். மெய் பொய்யும் பிரித்துக் காட்டி அறியாமை அகற்றி அறிவிருக்கும் தலத்தை அறிய வைத்து நாம் பெற்று வந்த அமானிதக் கடன் தீர்க்க உதவும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் – 219 :** உலகம் உய்யும் பெரும் செயலுக்கு துணையாக இருக்கும் மெய் உணர்வு கொண்டோரே தேவாதி தேவனின் திருத்தூதுவர்கள். அசலான இறைவனை நம் அறிவு நிலையில் ஏற்றி வைப்பவரே எதார்த்த தேவகுரு.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் - மத்தேயு - அதிகாரம் 7 - வாக்கியம் 15 - 23**. சத்தியம் தவறும் னித்திய மூடர்களே போலி குருமார்கள் என்பது பதினெண் சித்தர்கள் வாக்கு. நம் மனம் அடங்கச் செய்து எமனிடம் இருந்து நம்மைக் காப்பவரே மெய்க் குருபிரான். வேத வாசகங்கள் செயலாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனதற்ற பரிசுத்த நிலையே அறிவு. அதில் நிலைப்பதே வைராக்கியம். மனம் பிரம்மமாக மாற ஆசான் தயவும் கருணையும் வேண்டும். மாயப் பிறப்பின் அபாயம் தீர உபாயம் கூறும் சகாயரே சர்வ வல்லமை பொருந்திய குருபிரான்.

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

## 07-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்ட ராலும றியவொண் ணாத்திரு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி வாசுகி:* ஆசான் அருளால் அஞ்ஞான இருளகற்றும் அகமிய ரகசியமே **பசித்திரு-தனித்திரு-விழித்திரு** என்பதாம். சொல் ஒரு பொருளால் நரனை தேவனாக்கும் வல்லபம் கொண்ட சுத்த சைதன்ய நாதரின் நாதமே அறிவு நிலையில் நம்மை ஏற்றும் அரு மருந்தாகும்.

*ஜீவசகோதரி தீபாமுருகேசன்:* தொந்திக் கணபதியாக வரும் குருபிரானின் அருளே நானிலத்தில் நரனாய் இருந்தவனை தேவனாக்கி நற்கதி அடையச் செய்கிறது.

*ஜீவசகோதரர் கருப்பசாமி:* நித்தம் நிகழும் மரணப் பிடியிலிருந்து நம்மை விடுவித்து நித்திய வாழ்வு வாழச் செய்யும் நித்தியரே அறிவின் வடிவம்.

*ஜீவசகோதரர் பாலசுப்ரமணியம்:* சிவவாக்கியர் அருளிய கறிச்சுவை அறியாத சுட்ட சட்டி சட்டுவம் போல் நம் அகத்தில் விளங்கும் ஈசனை உலக அறிவு அன்றி பேரறிவு கொண்டே அறிய முடியும். ஆறாம் அறிவை ஆசான் அருளால் அறிந்தே நம் தேக ஆலயத்துள் இருக்கும் சுயம்பு லிங்கத்தை தரிசிக்க முடியும்.

*ஜீவசகோதரர் நேதாஜி:* மேய்ப்பரின்றி வெறித்து திரிந்த நம் மனதின் போக்கை ஆசான் தன் பெருங் கருணையால் அலையாமல் நிறுத்தி அறிவு இருக்கும் தலம் அறியச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் பொன் செல்வம்:* குருவாக திருவுரு தாங்கி வரும் ஃ எனும் பிரம்மமே நம்மை நீதி எனும் பொருள் ஆன மனுவாக மாற்றி நித்தியத்தில் ஆக்குகிறது. அதுவே ஐந்தாம் யோனியில் பிறக்க வைத்து ஆறாம் அறிவை அறியும் அருளமுது ஊட்டி ஏழாம் பிறப்புடலும் எடுக்கச் செய்து பிறவிச் சுழலிலிருந்து நம்மை விடுவிக்கிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மறலி கை தீண்டாமையே மரணமில்லா பெருவாழ்வு. நித்திய வாழ்வுக்கென வந்த மனு அனித்திய வாழ்வில் அவஸ்தைப் படாமல் அறிவுத் தெளிவுடன் வாழ்வதே துக்க நிவர்த்தி சுகப் பிராப்தியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*ஏகாக்ஷரத்தைத் தருபவராகிய குருவை எவன் மதிக்கவில்லையோ, அவன் சுவான (னாய்) யோனி னூற்றையடைந்து, சண்டாள யோனிகளிலும் பிறக்கின்றான்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 11-09-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறியவைத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அவரவரின் நாமத்துக்குரிய இறை பொருளான அரி எனும் சிவனாகிய ஜீவனை அறிவதே ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறும் வழியாகும். அறியாமை என்பது இறப்பாகவும் அறிவு என்பது இறப்பற்ற சிறப்பாகவும் உள்ளது. சர்வ வேதங்களும் உணர்த்தும் சாமுன் சாகப்பழக ஆசானின் ஒரு மொழி கீதையே துணை. ஒருருளை தேவரதத்தில் ஏறி வரும் ஆசானே நம் விதி எழுத்தை மதி எழுத்தாக மாற்ற வல்லவர். மதி எழுத்தின் மூலம் பிரம்மத்தை அறிந்தோரே பிராமணர் ஆவர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : திருவாக்கியம் : 7 (தொடர்ச்சி)** இத்தூலம் கடந்து நிற்கும் அம் மெய்ப்பொருள் இருக்கும் இடமே சத்திய னகரம். பெரிதைப் பெரிதெனவும், அதிசயத்தைக் கண்டு அதிசயிக்கும் அதி ஜெயப் பொருளாக சர்வத்துக்கும் தாய்க்குடிலாக தலைவனாக இருக்கும் ஜீவனை அறிந்து அடைவதே பிறவா னெறியின் ரகசியமாகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**
ஆண் பெண்ணாக அறிவு வடிவாக இருப்பது ஜீவன். தலைவி தலைவனுடன் ஒடுக்கம் எனும் ஆண் பெண்ணற்ற னிலையே உமையொரு பாகன் எனும் இறை நிலையாகும். அறிவு வடிவான ஆசானே திருவடி காட்டி, அரசு பீடமான அறிவிருக்கும் தலத்தில் இருத்தி, அவரவரிடம் இலங்கும் ஆட்சி எனும் சிரஞ்ஜீவி சஞ்ஜீவியை அறிய வைத்து உறுமதியை ஓங்கச் செய்பவர். குருவருளால் சிரசில் இருக்கும் முத்தியெனும் ஞான பூமிக்கு பிரயாணம் சென்று வருவதே ஜீவப்பிரயாணமாகும். இப் பிரம்மவித்தைச் செயலை பழக்கி வைக்கும் பெரியோரைப் பேணித் தமராய் கொண்டு அவர்களின் திருவாக்கினுள் ஆகி அமானிதத்தை தன்னுள் அறிந்துணர, சாலை ஆண்டவர்கள் அருளியதே, காலை 7 மணிக்கு நாம் ஓத வேண்டிய மகாசங்கல்ப மந்திரமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 13-09-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரவிரதாச் சாரி யென்றுமே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
குருவின் அருளால் ஒவ்வொரு மனுவும் ஓர் உலகம் என அறியும் அறிவுப் பிறப்பில் பிறப்பதே பிறவாமை என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. உயிரொட்டிய ரகசியமாகிய சமரசமும் சமாதானமும் ஆசான் அருளால் அறிந்து வாழ்வதே மரணமிலாப் பெருவாழ்வாகும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* அறிவுப் பிரகாசத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் குருவருளே திருவருள். குருபிரான் அருளும் ஒரு மொழி கீதையே அவரவரின் அகமுகப் பயணத்தின் வழிகாட்டியாகும். உபநிஷத் கூறும் சதுர் வாக்கியமும் பிரம்மத்தின் மேன்மை பற்றியே கூறுகின்றன.



Copyright © AMNA Trust, Chennai 

**கோடாயிதக்கூர் வாக்கியம் - 219 :** மெய் ஞான ராஜ பாட்டையில் அனைவரையும் அழைத்துச் செல்வதே பெரியோர்களின் எண்ணம். இல்லறத்தில் இருந்து கொண்டே யாவரும் இந்த மெய்யைப் பெற வேண்டும் என்பதே சர்வ சன்னதங்களும் பெற்று வந்த பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்களின் திரு நோக்கமாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் – மத்தேயு : அதிகாரம்-23, திருவாக்கியம் 13,25,26: மார்க் : அதிகாரம்-9 வாக்கியம்-45** அனித்திய உடலே நாம் எனும் அறியாமை நீக்கி வித்து விளைந்து விருட்சமாவது போல் அனுதினமும் நாம் அகமுகப் பயணத்தில் மேன்மை பெறச் செய்பவரே பரலோக கர்த்தர். நான்கு தேக ரகசியம் அறிய வைத்து அதில் குடியேறி வாழச் செய்யும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சங்கர்:* கங்குல் பகலற்ற இடத்தில் கலந்தவரே தன் பெருவெளியாகிய சாலையின் ரகசியம் அறிவர். பிறவிப் பிணி தீர்க்கும் நாத மருந்து அருந்தியவர்களே அறிவை அறிந்து அறிவுத் தெளிவுடன் வாழ்கிறார்கள்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙமதிடத்தி லைம்புலக் கதவை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் மகாலிங்கம்:* ஐயறிவையும் வகைப்படுத்தும் ஆறறிவு பெற்ற மனுவே கடவுளை அறியும் பூரண அறிவு நிலை பெற்றவன். தாயும் தந்தையுமாக இருப்பதே அறிவும் ஆற்றலும். அவரவர் நாமத்தின் பொருளாம், ஃ எனும் பிரம்மத்தை அறிய ஆசான் அருள்வதே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரர் ஏகாம்பரம்:* வாழையடி வாழையாக வரும் மெய்க் குருவின் நன்னாதமே சாகாக்கல்வி. தோற்றமுள்ள யாவும் அனித்திய மனமாகவும் தோற்றமில்லாமை நித்திய அறிவாகவும் உள்ளது. ஆசான் அருளால் அகமுகப் பயணம் செய்ய கவனம் மிகவும் அவசியமாகும்.

*ஜீவசகோதரர் நாகலிங்கம்:* இயந்திர கதியாக இருப்பதே மானிட வாழ்க்கை. இயற்கையின் அமைதி பஞ்ச பூதங்களின் சம நிலையிலும் மனிதனின் அமைதி ஐம்புலனின் சம நிலையிலும் உள்ளது. விஞ்ஞானம் கடந்த ஒன்றே ஞானம். முக்குணம் கடந்த நிர்க்குணமே அத்வைதம் என்ற தெய்வீக நிலையாகும்.

*ஜீவசகோதரர் தேவானந்த்:* புலன் வழி பற்றி ஓடி வாழ்நாள் வீணாகாமல் காக்கும் செயலே பிரம்மவித்தை. அறிவை முன் வைத்து நடப்பவரே கவலையற்ற மனதுடன் இருப்பர். ஞானிகளின் தயவால் ஒரு ஜீவ சமாதியின் முன் செய்யும் மெய்வணக்கமே பலன் தரும்.

*ஜீவசகோதரர் அருண்:* இல்லறத்தில் இருந்த படி ஞானம் பெறும் உபாயமே சாலை ஆண்டவர்கள் அருளியது. நிறங்கள் ஓர் ஐந்துள்ள இறைவனின் நிரந்தர நிராஞ்சன தோற்றமே புறத்தில் காணும் ஐம்பூத வண்ணமாகும். எண்ணத்தின் மூலமே வண்ண மயமான வாழ்வு அமையும். காலமும் நிறங்களும் முக்குணங்களின் மூலம் நிகழ்வதை ஆசான் அருளால் அறிவை அறிந்தோரே அறிவர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai October 2025

## 18-09-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வரமாகிய மானிதமது வாங்கிய...** எனும் ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
**நாத விந்து கலாதி நமோ நம...** என அருணகிரி நாதர் அருளிய அகமிய இரகசியம், ஓர் மெய் குருவின் கருணையால் நாம் அறியும் போதே புரட்டாசி மாதத்தின் சிறப்பையும், கோவிந்தா எனும் கோஷமுடன் பெருமாளின் திருவடியில் வணங்கி ஆசி பெற வேண்டிய ஆச்சார அனுஷ்டான முறைகளின் மெய்ச்செயலையும் உணர முடியும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : வாக்கியம் எண் 7 - குருபிரான் அருளமுதம் :** ஆச்சார்ய வடிவம் தாங்கி வரும் மெய்ஆசானின் அருட்பார்வையில் வானவர் திருமேனி எனும் மறுபிறப்பு பெறுவது ஒன்றே அறிவின் லட்சணம். ஜீவன் நலியாது காக்கும் அறச்செயல் மூலமே மாள்தல் எனும் பாவத்திலிருந்து மீண்டு, பெருமாள்தல் எனும் புண்ணியம் செய்து அழியா பேரின்ப பெருவாழ்வு பெற முடியும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**
அமரத்துவம் எனும் அதி மகோன்னத நிலையை மனிதன் அடைவதற்கென, கருணா மூர்த்தியாகிய சாலை ஆண்டவர்கள் வான நாட்டிலிருந்து இறக்கி அருளிய பொக்கிஷமே அறிவு அறி பாடம். அறிவு வடிவாக வரும் அவதார புருஷரின் அடிநிழலில் தஞ்சம் புகுந்து, தன்னை அறிதல் எனும் தவ முறையில் சாதித்து, அவரவரின் ஆன்மப் பொருளை தரிசனை கண்டு தேவ ரகசியம் தேர்ந்த நன்னெறியோரே தேவர்கள். வாழும் காலத்தில் அடக்கம் எனும் அமரத்துவம் பெறுவதே அறியாமை எனும் இறப்பிலிருந்து மீண்டு அறிவுப் பிறப்பில் வாழ்வதாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 20-09-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆறாம் அறிவும் கடமையும் அறியாது அவாவுடன் அழி உலகப் பொருள் தேடி தணியா தாகமுடன் பிறவிச் சுழலில் சிக்க வைக்கும் அவரவர் மனதை குருவருளால் அறிவாக மாற்றி உயிராகிய இறைவனை கண்டு தரிசித்து தன்னை அறிந்து தேவனாகும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க நீதி அவை.

**கோடாயிதக்கூர் : வாக்கியம் – 219 :** அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் ஒன்று போல் கருணை காட்டும் இறைவனை அறியாதவர் வினையின் பிடியில் சிக்குவது நிச்சயமே. எமனிடமிருந்து காக்கும் தெய்வத் துணையை தேட வேண்டியதே நம் தலையாய கடமை.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் - கோளோசையர் இரண்டாம் அதிகாரம் 8,9,10 :** அரிதிலும் அரிதான அவதார புருஷரே நம் அகக்கண் திறக்க வல்லவர். புறச் சடங்குகளாலும் தான் படித்த இலக்கணம் கொண்டும் இறைவனை அறிய நினைப்பது அறியாமையே. ஆத்ம ஞானம் அறிந்த சித்தர்கள் நா வலுக் கொண்டு நவில்வதே வேதம். அவர்களின் வாய்மையே எமன் எல்லையில் நம்மை வெற்றி பெறச் செய்யும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் கௌதம்:* மேல் நோக்கான எண்ணமுடன் ஒருவனை வாழ வைக்கும் சிந்தையற்ற தனித்தலைமை பதியாக வரும் பெரியோர்கள் இரக்கத்துடன் அருள்வதே அறமாகும்.

*ஜீவசகோரரர் முருகன்:* முக்குண நிலை விட்டு ஒருவனை நிர்க்குண நிலையில் ஆக்கி ஆறாம் அறிவை அறியச் செய்து சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி கல்பில் விளங்கும் கடவுளை காணச் செய்பவரே மெய்யான குருபிரான்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 25-09-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துறந்நமனத் தனியோகர் உளத்திற் பூக்கும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



*ஜீவசகோதரர் விஜயகுமார்:* உலகம் தோன்றிய காலம் முதல் உண்டான பழமை ஞானத்தை என்றும் புதுமை சிந்தும் அமுதமாக அருளும் ஆசானின் பேரிரக்கமே நம் அறியாமை அகற்றி மெய் இருதயமாம் கல்பில் பிரகாசிக்கும் இறைவனை தரிசிக்கச் செய்கிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் 8 : குருபிரான் அருளமுதம்:** நித்தியராம் சிவகுருவின் நாத மருந்தே நம் மரண வறுமை தீர்க்கும் மாமருந்தாகும். காலன் நம்மை ஒன்றும் செய்யாமல் இருக்க பெரியோர்கள் செய்யும் உதவியே செய்னன்றி ஆகும். மனிதனைப் பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியான ஜீவப்பிரகாசத்தின் அன்பே நம் தலையில் சிவனெனும் வாடாத தீபத்தை ஏற்றி வைக்கிறது.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:** வாசி எனும் குதிரையின் ரகசியம் அருளும் பரிபாஷையே மொழிகள் கடந்த ஸ்பரிச, னயன, திருவடி தீட்சை அருளும் குரு மொழியாகும். இறை குருவின் இருளறு மொழி கொண்டு ஜீவவாழ்வில் ஏறும் போதே தூல வாழ்வை துச்சமாக எண்ண முடியும்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* மணிவாசகப்பிரான் குரு காணிக்கையாக கட்டியதே திருப்பெருந்துறை ஆவுடையார் கோவில். கற்பகத் தருவாம் ஆசானின் திருவடி னிழலில் சீடன் பெறும் ஸ்பரிச, நயன, திருவடி தீட்சையே முச்சுடர் ரகசியத்தின் யோக நிலைகளாகும். குரங்கு போல் கீழ் நோக்கி பாயும் மனதை, உடும்பு போல் ஞான பாதையில் பற்றி ஏற, குருவே சிவனாக எழுந்தருளி மனதற்ற பரிசுத்த நிலையில் ஆக்கிய செயலே நரியைப் பரியாக்கிய அகமிய ரகசியமாகும். குருவருளால் மெய்யறிவு பெற்ற மக்களே இதை அனுபவத்தால் அறிவர்.

பரிசுத்தஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 27-09-2025 ~ சனிக்கிழமை அவை~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வாழ்வனைத்தும் தந்நெனது...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம்:**
ஜீவ சிம்மாசனக் கொலு வீற்றிருக்கும் இறைவனை அடைவதற்கான படி நிலைகள் குறித்து நடக்கும் நிகழ்வே நவராத்திரி கொலு. வினை தீர்க்கும் ஆயுதமே கூர் எனும் அறிவாகிய கோடாயிதக்கூர். அசைவற்ற பரம்பொருளுடன் கலந்து வாழ்வதே அறிவுள்ள வாழ்வாகும். வேடிக்கை கண் கொண்டு பார்க்கும் பொருளை இன்னதென அறிவிப்பதே அறிவுக் கண்ணாகும். அறியாமையே மரணமாகவும் அறிவே வாழ்வாகவும் உள்ளது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் 220 - குருபெருமான் அருளமுதம்:**
அறிவுக்கான துணையை தேடுவதே அறிவாகும். ஆதி எனும் அறிவை அறிவதற்கு குருவே துணை என அறிந்து அவரைத் தேடுவதே நம் கட்டாயக் கடமையாகும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* நம்மை ஜீவிக்க செய்யும் பிராணனை அறியச் செய்யும் பரிசுத்த ஆவியே ஆசானின் நாதம். மெய்வழி என்பது குருபிரான் தயவால் செயல் பழக்கமாக, காலனாகிய மனதின் பிடியிலிருந்து விடுபட்டு வாழும் வாழ்வாகும். அறியாமையில் இருப்போர்க்கு அறிவை கொடுப்பதே தான தர்மம் ஆகும். குருவின் தயவால் ஜீவனின் அன்பை நம் மீது சாயச் செய்வதே பிறவாமை பெறுவதற்கான வழியாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் – யோவான் அதிகாரம் : 1 திருவாக்கியம் - 1,2,4:** அழிவற்ற பொருள் மீது வைக்கும் அன்பே அழிவற்ற வாழ்வு தரும். பாலுக்கு நிகரான பரிசுத்தமே பெரியோர்களின் வாய்மை. இறைவனின் உன்னதத்தை வேத சாட்சியாக நம் உள்ளத்துள் உரிமையுற உணரச் செய்பவரே மெய் குருபிரான். குரு எனும் இரண்டெழுத்து மந்திரமே நம் ஜீவனை சிவனாக மாற்றும் வல்லபம் கொண்டது. நீதி வழியில் நடப்பவர்க்கே எமன் எமதர்மராஜன் ஆகி ஜென்ம சாபல்யம் அருள்கிறார்.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 28-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரண்டிடு மடத்தாருபதேச...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது .

*ஜீவசகோதரி வளர்மதி:* மரணமில்லா பெருவாழ்விற்கான வழியையும் நமது நாமத்திற்குரிய பொருளையும் அறிவதற்கு பெரியோர்கள் அருளும் செவிச் செல்வம் நிச்சயம் வேண்டும். இவ்வுடல்தான் நாம் என எண்ணும் அறியாமைக்கு காரணமான மனதை குருவருளால் அறிவாக மாற்றும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி சுதாமணி:* ஜோதி வழிபாடு ஜீவகாருண்யம் இவற்றின் அசல் செயலை உணர்த்தும் நகல் வடிவே ஆலயங்கள். மூச்சு துண்டாடப் பட்டு நஷ்டமடையும் பாவச் செயலை மாற்றி வைப்பவரே குருபிரான். தாவுகின்ற மனதின் செயலையும் அதை மாற்றி விடாப்பிடியான ஆர்வத்துடன் மெய்யில் ஏற வேண்டும் என உணர்த்துவதே, குரங்கு மற்றும் உடும்பின் ஆவுடையார் கோவில் சிற்பங்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி நந்தினி:* கோவில்களில் உள்ள அனைத்து வடிவங்களும் அகத்தில் உள்ள அசலை உணர்த்துவதே ஆகும். நம் இரும்பாகிய மனதில் உள்ள துருவாகிய மாயையை ஒரு மெய் குருபிரான் தன் அருளால் அகற்றி அறிவாக மாற்றும் செயலே பிரம்ம வித்தை.

*ஜீவசகோதரர் குமார் (பவானி):* ஆசான் அருளால் ஆறாம் அறிவை அறிந்த பின்பே முக்கோணம், அறுகோணம், பஞ்சபூதங்கள், புலன்கள், பொறிகளின் நிலைகளை அறிய முடியும். ஒழுக்க நெறியின் மூலமே நம் தடுமாறும் மனம் சீராகி கவனமும் எண்ணமும் மேன்மை பெறும். மெய் இச்சை ஆர்வம் உள்ளவர் யாவரும் குருவின் அருளால் தன் ஜீவனைக் கண்டு பேரின்பம் பெறலாம்.

*ஜீவசகோதரர் ராஜா (மார்த்தாண்டம்):* நமது ஆறாவது அறிவு இன்னதென அறிய ஒரு மெய் குருபிரான் வேண்டும். புறத்தில் தேடிக் காணாத அருட்பெருஞ்ஜோதியை ஆசான் தயவால் அகத்துள் ஓடி ஓடி உட்கலந்து காண்பதே மெய்வழி. அனித்திய உடல் கடந்த நித்திய உன்னதத்தை உணரச் செய்பவரே ஆசான். அறிவு இருக்கும் தலம் அறிந்து ஆவி வீணாகாமல் காக்கும் செயலே ஆசான் அருளும் பிரம்மவித்தை.

*ஜீவசகோதரி சித்ரா (பவானி):* பூத பூதியங்களும் புலன் பொறிகளும் தன்னுள் அறிந்து வாழ ஆசானின் நாதமே துணை. அதுவே நம் மரணப் பிணி தீர்க்கும் மாமருந்தாகும்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* பெரியோர்கள் பாடுபட்டு பெற்று இரக்கமுடன் நம்மிடம் அருளிய மெய்யை பிறரிடம் கொண்டு போய் சேர்ப்பதே நம் தலையாய கடமை. பண்படாத மானுடனின் மனதை அறிவாக மாற்றும் செயலே ஓட்டாஞ் ஜல்லியை தங்கமாக மாற்றும் ரசவாத வித்தையாகும்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*குருவை விட்டு விலகுதலால் மரண முண்டாகும். குரு மந்நிரத்தை விடுதலால் தரித்திரியத் தன்மை யுண்டாகும். குருவையும் மந்நிரத்தையும் விட்டவன் இரௌரவாதி னரகத்தை யடைகிறான்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**07-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

மணிவாசகப் பிரான் அருளிய **சுழியாகிய முனை...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியம் அகில வலம் வரும் பருவத்தில் **அருள் தலை யுகத்து...** என்ற பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**14-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **பனுவலும் பாடலாலும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தில் இருந்து **செயலுடைச் சமரசம்** என்ற பாடல் பகுதி இருவிதமான ராகத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**28-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **தன்னே ழின்னபு சின்புற...** என்ற பூரணப் புதையல் பாடலுடன் அவை மலர்ந்தது. **செயலுடைச் சமரசம்** என்ற பாடல் பகுதி மீண்டும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*சிவனது கோபத்தினின்றும் குரு இரட்சிக்கின்றார். குருவினது கோபத்தினின்றும் சிவன் இரட்சிப்பதில்லை. ஆதலால் சகல பிரயத்தினத்தினாலும் சற்குருவின் ஆணையைக் கடக்கலாகாது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 2025 - செப்டம்பர் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 04-09-2025 ~ வியாழக்கிழமை

நமது குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திருமுன்பாக ஜீவ தம்பதியர் **மகேஸ்வரன் - பானு (சென்னை)** அவர்களின் **மூத்த புதல்வி ரம்யா - விக்னேஷ்ராஜன்** இவர்களின் திருமணம் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.



### 21-09-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

நமது குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** தன் அங்கத்தினர்களுடன் புதுக்கோட்டை மாவட்டம், **திருப்பெருந்துறை** ஊரில் ஆணிப் பொன்னாட்டு அருந்தவச் செம்மலாகிய **சீணிக்காத நெறி மாணிக்கவாசக வல்லாள கண்ட மன்னராகிய தேவகோமான் ஸ்ரீ மாணிக்கவாசகப் பிரானவர்கள்** கட்டிய, தேவாரப் பாடல் பெற்ற தலமாகிய **ஆத்மநாதசுவாமி ஆவுடையார்** கோவிலுக்கு எழுந்தருளினார்கள்.







Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **09-11-2025 / திண்டிவனம் ஞாயிற்றுக்கிழமை** | நமது குருபிரான் திருவுளப்படி விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் ஏவளூர் கீழ்க்காரணை கிராமம் மாரியம்மன் கோவில் ரோடு அருகில் உள்ள **சரவண நந்தவன** வளாகத்தில் –<br>காலை 9.00 மணி அளவில் ஆதி மார்க்க னீதி அவையின் **ஆலயம் அடிக்கல் நாட்டும் விழா** நிறைவேற உள்ளது. |
| **23-11-2025 / சிவகாசி ஞாயிற்றுக்கிழமை** | நமது குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** அவர்களின் திரு முன்பாக ஜீவப்பிறவியர் **நேதாஜி - ஐஸ்வர்யா** அவர்களின் திருமணம் 23-11-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.45 மணி – 11.45 மணியளவில் சிவகாசி, திருத்தங்கல் ஸ்ரீ அருள்மிகு நின்ற நாராயண பெருமாள் கோவிலில் நடைபெற உள்ளது. |
| **29-11-2025 / சென்னை சனிக்கிழமை** | மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதாரத் திருநாளை முன்னிட்டு குருபிரான் முன்னிலையில் சிறப்பு அவை சென்னையில் நடைபெற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 செப்டம்பர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 65**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

**_Published by:_**
**_AMNA TRUST (Registration No. 163/2019)_**
**_13/2, Hyder Garden 2nd Street, Otteri ,_**
**_Chennai – 600012_**

**_www.amnatrust.org_**

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 51 – Month: October 2025*